

# பனிமயம்

சனவரி 2022

ஆண்டுச் சந்தா
ரூ. 50/-

தனிப் பிரதி
விலை ரூ. 5/-





## பனிமயத் தாயின் பாதத்திலிருந்து...



இதோ, 2022 என்னும் புதிய ஆண்டு புலர்ந்துள்ளது. கடந்த ஒன்றரை ஆண்டுகளாகக் கொரோனாப் பெருந்தொற்றின் பிடியில் சிக்கி உலகம் முழுவதும் பல இழப்புகளைச் சந்தித்தது. அதன் கோரப் பிடியிலிருந்து இப்போதுதான் நாம் மெல்ல மெல்ல மீண்டு வருகிறோம். இந்தப் புதிய ஆண்டு நம் அனைவருக்கும் நம்பிக்கையின் ஆண்டாக, வளமையின் ஆண்டாக அமையட்டும் என்பதே எனது இறைவேண்டலும், வாழ்த்தும்.

இந்தப் புதிய ஆண்டு நமக்கு புதிய நம்பிக்கையின் ஆண்டாக இருக்கட்டும். “ஏனெனில் கடவுளிடமிருந்து பிறக்கும் அனைத்தும் உலகை வெல்லும்; உலகை வெல்லுவது நம் **நம்பிக்கையே**” (1 யோவா 5:4) என்னும் இறைமொழிக்கேற்ப நமது நம்பிக்கை உலகை வெல்லட்டும், உலகம் சந்திக்கும் அனைத்துத் தீமைகளையும் வெல்லட்டும்.

இம்மானுவேலாக, ஒரு குழந்தையாக நம் நடுவில் பிறந்த கடவுள் நம்மை இந்த ஆண்டு முழுவதும் வழிநடத்துவார். “இஸ்ரயேல் நடுவில் நான் இருக்கிறேன் என்றும், ஆண்டவராகிய நானே உங்கள் கடவுள் என்றும், என்னையன்றி எவரும் இல்லையென்றும் நீங்கள் அறிந்துகொள்வீர்கள்; **இனிமேல்** என் மக்கள் ஒருபோதும் நிந்தைக்கு உள்ளாக மாட்டார்கள்” (யோவே 2:27) என்ற இறைவாக்கின்படி, கடந்த காலத்தின் கசப்புகள் இனிமேல் நமக்கு நிகழாது என்று உறுதிகொள்வோம்.

அனைவருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்! அனைத்தையும் புதிதாக்கும் கிறிஸ்துவை ஈன்ற பனிமயத் தாயின் ஆசி உங்களோடு இருப்பதாக!

என்றும் அன்புடன்,

**அருள்பணி. குமார்ராஜா**

பங்குத் தந்தை & திருத்தல அதிபர்



உதயம் 22 தாரகை 5

பனிமயம்

நிர்வாகி & வெளியிடுபவர்
**அருட்பணி. குமார்ராஜா**
அதிபர் மற்றும் பங்குத்தந்தை,
தூய பனிமய அன்னை பேராலயம்,
தூத்துக்குடி

ஆசிரியர்:
அருட்பணி. குமார்ராஜா

**பனிமயம் விளம்பர விபரங்கள்**

| | | |
|---|---|---|
| அரைப்பக்க விளம்பரம் | - | ரூ. 500/- |
| முழுப்பக்க விளம்பரம் | - | ரூ. 1000/- |
| பின் பக்க அட்டை உட்புற விளம்பரம் | - | ரூ. 1500/- |
| பின் பக்க அட்டை வெளிப்புற விளம்பரம் | - | ரூ. 2000/- |

வடிவமைத்து, அச்சிட்டோர்
R. சதீஷ் குமார்
ஷைனி ஆப்செட் பிரிண்டர்ஸ்
41C, பெரைரா தெரு, தூத்துக்குடி-1

ஆண்டுச் சந்தா ரூ. 50

முகவரி : **'பனிமயம்'**
**தூய பனிமய அன்னை பேராலயம்**
42, கடற்கரை வீதி, தூத்துக்குடி-628 001.
0461-2320854, 2330147, www.snowsbasilica.com

## இம்மாதத்திற்கான திருத்தந்தையின் செபக்கருத்து

### உண்மையான மனித சகோதரத்துவத்திற்காக

சமயப் பாகுபாடு மற்றும் அடக்குமுறைகளால் துன்புறும் மக்கள் மனிதக் குடும்பத்தில் சகோதர சகோதரிகளாக இருந்து, அவர்களது சொந்த உரிமைகள் மற்றும் மாண்பு அங்கீகரிக்கப் பட நாம் மன்றாடுவோம்.

# உள்ளே...

1. அன்னை மரியா ஞானத்திற்கு உறைவிடம்! ....................4
அருள் மரி வேந்தன்

2. மரியன்னை புனிதர்கள் :
புனித டைட்டஸ் பிரான்ட்ஸ்மா ....................6
அருள்பணி. குமார்ராஜா

3. பனிமய அன்னை ....................8
தி. சொர்ணராஜன் விக்டோரியா

4. மாதம் ஒரு மாதா படம் ....................11

5. பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்..........12
செல்வராஜ் மிராந்தா

6. பனிமயம் - மீள்பார்வை ....................14
கலாபன் வாஸ்

7. நம் திருச்சபை, நமது பெருமை ....................16
"க்றிஸ் மிலியன்"

8. விவிலியப் போட்டி ....................18

9. பனிமய சாட்சியங்கள் ....................20

10. பனிமயப் பகிர்வு ....................21



# அன்னை மரியா ஞானத்திற்கு உறைவிடம்!

"ஞானம் நிறை கன்னிகையே, நாதனைத் தாங்கிய ஆலயமே" என்பது நாம் நன்கு அறிந்த ஒரு மரியன்னைப் புகழ்ப்பாடல். லொரேட்டோ மன்றாட்டு மாலை என்றும் அழைக்கப்படும் மரியன்னை பிரார்த்தனையில் அன்னையை "ஞானத்திற்கு உறைவிடமே" என்று அழைக்கிறோம்.

ஞானத்திற்கும் அன்னை மரியாவுக்கும் என்ன தொடர்பு? ஏன் நம் அன்னை ஞானத்திற்கு உறைவிடம் என்று அழைக்கப்படுகிறார்? இந்தக் கேள்விகளுக்கு விடை காண நாம் விவிலியம் மற்றும் திருஅவையின் வரலாறை நாட வேண்டும்.

முதலில் விவிலியத்தைப் பார்ப்போம். விவிலியத்தின் மாபெரும் ஞானி யார்? இக்கேள்விக்கு விடை காண முதலில் பழைய ஏற்பாட்டைப் புரட்ட வேண்டும். பழைய ஏற்பாட்டின்படி, சாலமோன் அரசன்தான் மிகச் சிறந்த ஞானி. "கீழை நாட்டினர் அனைவரின் ஞானத்தையும், எகிப்தியரின் எல்லாவகை ஞானத்தையும்விடச் **சாலமோனின் ஞானம்** சிறந்ததாய் விளங்கிற்று" (1 அர 4:30). "சாலமோனின் ஞானத்தைக் கேட்கப் பல்வேறு இனத்தைச் சார்ந்தவர் அவரை நாடி வந்தனர். அவரது ஞானத்தைப் பற்றிக் கேள்வியுற்ற பின்னர் அனைவரும் அவரைத் தேடி வந்தனர்" (1 அர 4:34) என்று பழைய ஏற்பாடு சாலமோனைப் பாராட்டுகிறது.

ஆனால், புதிய ஏற்பாடோ ஆண்டவர் இயேசுவை சாலமோனைவிட ஞானத்தில் சிறந்தவராக உயர்த்திப் பெருமைப் படுத்துகிறது. "இயேசு **ஞானத்திலும்**, உடல் வளர்ச்சியிலும் மிகுந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" (லூக் 2:52) என்பது இயேசுவின் குழந்தைப் பருவத்தைப் பற்றிய லூக்காவின் பதிவு. சாலமோனைப் போல அல்லாது, குழந்தைப் பருவத்திலேயே ஞானம் நிறைந்தவராய் இருந்தது இயேசுவின் முதல் சிறப்பு.

தொடர்ந்து, இயேசுவின் பணிவாழ்விலும் அவரது ஞானத்தை மக்கள் பாராட்டினர். இயேசு தமது சொந்த ஊருக்கு வந்து அங்குள்ள தொழுகைக் கூடத்தில் அவர்களுக்குக் கற்பித்தார். அதைக் கேட்டவர்கள் வியப்பில் ஆழ்ந்தார்கள். அவர்கள், "எங்கிருந்து இந்த **ஞானம்** இவருக்கு வந்தது? எப்படி இந்த **வல்ல செயல்களைச்** செய்கிறார்?" (மத் 13:54) என்று வியந்து பாராட்டினர்.

அது மட்டுமல்ல, இயேசுவே தாம் சாலமோனைவிட (ஞானத்தில்) பெரியவர் என்று துணிவுடன் கூறி அனைவரையும் வியக்க வைத்தார். "தீர்ப்பு நாளில் தென்னாட்டு அரசி இத்தலைமுறையினரோடு எழுந்து இவர்களைக் கண்டனம் செய்வார். ஏனெனில் அவர் சாலமோனின் ஞானத்தைக் கேட்க

உலகின் கடைக் கோடியிலிருந்து வந்தவர். ஆனால் இங்கிருப்பவர் **சாலமோனிலும் பெரியவர்** அல்லவா" (மத் 12:42) என்பது இயேசுவின் தன்னம்பிக்கை நிறைந்த சொற்கள்.

இந்த வாதத்தை இயேசுவின் சீடர்கள் ஏற்றுக்கொண்டனர். தொடக்கத் திருஅவை இயேசுவின் ஞானத்தை நம்பிக்கையாக அறிக்கையிட்டது. "அழைக்கப்பட்டவர்கள், யூதரானாலும் கிரேக்கரானாலும், அவர் களுக்குக் கிறிஸ்து கடவுளின் வல்லமையும் **ஞானமுமாய்** இருக்கிறார்" (1 கொரி 1:24) என்றும், "கிறிஸ்துவே கடவுளிடமிருந்து நமக்கு வரும் **ஞானம்**" (1 கொரி 1:30) என்றும் அறிக்கையிட்டார் பவுலடியார்.

இப்போது நாம் அன்னை மரியாவுக்கு வருவோம். இயேசுவின் இந்த ஞானம் தூய ஆவியாரின் கொடை அல்லவா? "ஆண்டவருடைய ஆவி என்மேல் உளது. ஏனெனில், அவர் எனக்கு அருள்பொழிவு செய்துள்ளார்" (லூக் 4:18) என்று இயேசுவே அறிவித்தார். "**தூய ஆவி** உம்மீது வரும். உன்னத கடவுளின் வல்லமை உம்மேல் நிழலிடும். ஆதலால் உம்மிடம் பிறக்கப் போகும் குழந்தை தூயது. அக்குழந்தை இறைமகன் எனப்படும்" (லூக் 1:35) என்று வானதூதர் அறிவித்தார். எனவே, இயேசுவிடமிருந்த ஞானத்தின் ஆவி அன்னை மரியாவிடமும் இருந்தது என நாம் துணிவுடன் சொல்லலாம்.

மேலும், "மரம் நல்லது என்றால் அதன் கனியும் நல்லதாக இருக்கும். மரம் கெட்டது என்றால் அதன் கனியும் கெட்டதாக இருக்கும். **மரத்தை அதன் கனியால் அறியலாம்**" (மத் 12:33) என்பது இயேசுவின் கூற்று. கனியான இயேசு ஞானத்தில் சிறந்து விளங்கினார் என்றால், அந்தக் கனியை ஈன்ற மரமான மரியாவும் ஞானம் நிறைந்தவராகத்தானே இருப்பார்?

இப்போது நாம் திருஅவையின் மரபுக்கு வருவோம். "ஞானத்திற்கு உறைவிடம்" (Sedes Sapientiae) என்ற சொல்லாடலை முதன் முதலில் பயன்படுத்தியவர் நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித அகுஸ்தினார். பின்னர், பன்னிரண்டாம் நூற்றாண்டின் மரியன்னைப் புனிதரான பெர்நார்து அன்னையை "இறை ஞானத்தின் இல்லம்" என்று எழுதினார். பெனடிக்டைன் துறவியான ஓடோ இந்த கருத்தைப் பற்றி விரிவாக எழுதி யுள்ளார். "மெய்யியல் என்பது ஞானத்தை விரும்பித் தேடுவது. கிறிஸ்தவர்களுக்கோ, ஞானத்தை விரும்பித் தேடும் அனைவரும் நிறைவாகக் கண்டடைவது அன்னை மரியாவையே" என்பது அவரது வாதம்.

பழைய ஏற்பாட்டின் நீதிமொழிகள் நூல், சீராக்கின் ஞானநூல், சாலமோனின் ஞானநூல் போன்ற ஞானநூல்களில் சொல்லப்படும் ஞானம் இயேசுவையே குறிக்கிறது என்பதே திருமறைத் தந்தையரின் புரிதல். "எல்லாவற்றுக்கும் **முன்னர்** ஞானமே உண்டாக்கப்பட்டது" (சீஞா 1:4), "உயர்வானில் உள்ள கடவுளின் **வாக்கே** ஞானத்தின் ஊற்று" (சீஞா 1:5) போன்ற சொல்லாடல்கள் இந்த வாதத்துக்கு வலு சேர்க்கின்றன. எனவே, திருமறைத் தந்தையர் இயேசுவைத் தம் வயிற்றில் தாங்கிய தாயான மரியாவை ஞானத்தின் உறைவிடம், ஞானத்தின் இல்லம் என அழைத்தனர்.

அண்மைக் காலப் புனிதரான கர்தினால் நியுமன் தமது மரியன்னைச் சிந்தனைகள் நூலில் ஞானத்தின் ஊற்றான இயேசு மரியாவின் வயிற்றில்தான் குடி கொண்டிருந்தார். எனவே, மரியா ஞானத்தின் இல்லம் ஆகிறார். இயேசுவைப் பெற்றெடுத்த பின்னரும், மரியா குழந்தை இயேசுவைத் தம் மடியில் அமர வைத்திருந்தார். எனவே, ஞானத்தின் ஆசனம் (SEAT OF WISDOM) என அவரை அழைப்பது பொருத்தமே என்கிறார்.

எனவே, நாமும் அன்னையை "ஞானம் நிறை கன்னிகையே" என்று பாடிப் புகழ்வது தகுதியும், நீதியுமானதே!

**அருள் மரி வேந்தன்**

50 மரியன்னைப் புனிதர்கள்

# புனித டைட்டஸ் பிரான்ட்ஸ்மா

(1881-1942)

## நம்பிக்கைக்காக உயிர் நீத்த மறைசாட்சி!



இரண்டாம் உலகப் போரின்போது ஹிட்லரின் நாஜிப் படைகளால் கொல்லப்பட்ட மறைசாட்சி மாக்ஸ்மிலியன் கோல்பேயை நினைவிருக்கிறதா? அவரைப் போலவே நாஜிக் கொள்கைகளை எதிர்த்து எழுதியும், பேசியும் வந்ததால் சிறையில் அடைக்கப்பட்டு மறைசாட்சியாய்க் கொல்லப்பட்டவர்தாம் புனித டைட்டஸ் பிரான்ட்ஸ்மா (Titus Brandsma). சரியாகச் சொல்வதானால், அருளாளர் பிரான்ட்ஸ்மாதான். எதிர்வரும் 2022 மே மாதம் 15ஆம் நாள்தான் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களால் புனித நிலைக்கு உயர்த்தப்படவிருக்கிறார்.

இன்றைய காலகட்டத்துக்குத் தேவையான ஒரு புனிதர். “வெறுப்பை அன்பால் வென்றவர்” என்று திருத்தந்தை இரண்டாம் ஜான் பவுலால் பாராட்டப்பட்ட பிரான்ட்ஸ்மா நெதர்லாந்து நாட்டில் 23.02.1881 அன்று இறைப்பற்றுள்ள கத்தோலிக்கக் குடும்பத்தில் பிறந்தவர். அவரது நான்கு சகோதரிகளில் மூவர் அருள்சகோதரிகளாகவும், ஒரே சகோதரர் பிரான்சிஸ்கன் துறவியாகவும் மாறினர். அண்ணனைப் போலவே, பிரான்சிஸ்கன் சபையில் சேர்ந்த பிரான்ட்ஸ்மா, பின்னர் உடல் நலக் குறைவின் காரணமாக வெளியேறி, பின்னர் கார்மல் சபையில் அருள்பணியாளரானார்.

அறிவாற்றல் மிக்கவரான பிரான்ட்ஸ்மா இத்தாலியன், ஆங்கிலம், ஸ்பானிஷ் ஆகிய மொழிகளைப் பேச முடிந்தது. புனித அவிலா தெரசாவின் எழுத்துக்களை ஸ்பானிஷ் மொழியிலிருந்து டச்சு மொழியில் பெயர்த்து எழுதினார். 1905ஆம் ஆண்டு தமது 24 வயதில் அருள்பொழிவு செய்யப்பட்டார். உரோமையிலுள்ள கிரகோரியன் பல்கலைக்கழகத்தில் மெய்யியலில் முனைவர் பட்டம் பெற்று, தமது கார்மல் குருமடத்தில் பேராசிரியரானார். இருபது ஆண்டுகளாகப் பல்கலைக் கழகத்திலும் பயிற்றுவித்தார், செய்தித் தாள்களில் தொடர்ந்து எழுதினார், இதழியலாளராகவும் செயல்பட்டார். அமெரிக்கா போன்ற நாடுகளுக்கும் சென்று உரையாற்றினார்.

1935ஆம் ஆண்டில் யூதர்களுக்கு ஆதரவாக எழுதியதால், நாஜிக்களின் எதிர்ப்பை சம்பாதித்தார். கத்தோலிக்க இதழ்கள் நாஜிக்களுக்கு ஆதரவாக செயல்படக்கூடாது என்று வாதிட்டார். 1940ஆம் ஆண்டு ஹிட்லரின் ஜெர்மன் படைகள் நெதர்லாண்டை ஆக்கிரமித்தன. ஆனாலும், தொடர்ந்து நாஜி சித்தாந்தத்தை எதிர்த்து எழுதிவந்தார். அதன் காரணமாக 1942 ஜனவரி 19ஆம் நாள் கைது செய்யப்பட்டு சிறையிடப்பட்டார்.

சிறையிலிருந்து கடிதங்கள் பல எழுதினார். சிறையில் பிற கைதிகளோடு உரையாடினார், செபித்தார். அதனால், ஜெர்மனியிலுள்ள டச்சாவ் சிறைக்கு மாற்றப்பட்டார். சிறையில் கடுமையாக நடத்தப்பட்டதால், நலம் குன்றினார். 1942 ஜூலை 26 அன்று விஷ ஊசி செலுத்தப்பட்டுக் கொல்லப்பட்டபோது அவரது வயது 61.

பிரான்ட்ஸ்மா மரியன்னை பக்தி, கிறித்தவ ஒன்றிப்பு, டச்சுப் பண்பாடு, கல்வி, இதழியல்



ஆகியவை பற்றி ஏராளமாக எழுதியுள்ளார். அவரது எழுத்துக்களே அவரது இறப்புக்குக் காரணமாயின. கத்தோலிக்க இதழ்கள், நாளேடுகளில் ஆன்ம இயக்குநராக இருந்தவர் பிரான்ட்ஸ்மா. நாஜிக்களுக்கு ஆதரவான விளம்பரங்கள், செய்திகளை வெளியிடக் கூடாது என்று டச்சு ஆயர்கள் முடிவெடுத்தனர். அந்த அறிவிப்பை ஒவ்வொரு நாளேட்டுக்கும் கொண்டு செல்லும்போதுதான் அவர் கைது செய்யப்பட்டார்.

சிறையில் இருந்த 7 மாதங்களையும் செபிப்பதிலும், எழுதுவதிலும் கழித்தார். சிறையில் அவரது அன்றாட வாழ்வு பற்றித் தம் சகோதர துறவிகளுக்குக் கடிதம் எழுதினார். அதில் தினமும் காலை எழுந்ததும் முழந்தாள்படியிட்டு இறைவேண்டல் செய்வதாகவும், திருப்பலியின் செபங்களை மனப்பாடமாக செபித்து, ஆன்மிக முறையில் நற்கருணை அருந்துவதாகவும் எழுதியுள்ளார். சிறை அறையை சுத்தம் செய்வது, துணிகளைத் துவைப்பது போன்ற பணிகளுக்கிடையே தவறாமல் காலைத் திருப்புகழ் மாலை, நண்பகல் இறைவேண்டல், மாலைத் திருப்புகழ்மாலை ஆகியவற்றை செபிப்பதோடு, தியானமும் செய்வதாகக் குறிப்பிட்டுள்ளார். நேரம் கிடைக்கும்போது எழுதவும் செய்துள்ளார். தினமும் செபமாலை செபிக்கத் தவறுவதில்லை. அவருக்கு விஷ ஊசி செலுத்திய செவிலியருக்குத் தமது செபமாலையைப் பரிசாகக் கொடுத்தாராம். என்னே ஒரு மாமனிதர்!

சிறையில் அவர் எழுதிய “என் சிறை” என்ற கட்டுரையும், அவர் இயற்றிய “கிறிஸ்துவின் படத்தின் முன் செபம்” என்னும் மன்றாட்டு பிரபலமாயின. “இனிய இயேசுவே, உம் அன்பு என் இதயத்தை நிரப்புகிறது. உம்மோடு இணைந்திருந்தால், எந்தத் துயரும் என்னை அணுகாது. நீர் என்னோடு இருப்பதால், நீர் முன்பு அனுபவித்த தனிமையை இப்போது நான் அனுபவிக்கவில்லை. உமது அன்பு என் சிறையின் இருளை அகற்றி ஒளியேற்றுகிறது. என்னோடு தங்கும் ஆண்டவரே. நான் எதற்கும் அஞ்சமாட்டேன்” என்பதே அந்தப் புகழ்பெற்ற மன்றாட்டு!

மரியன்னை பக்தியை சூரியகாந்தி மலரோடு ஒப்பிட்டு அவர் எழுதிய இந்த மரியன்னைச் சிந்தனை பலரையும் ஈர்த்தது. “அன்னை மரியா கடவுளோடு கொண்டிருந்த அன்பை - ஏன் நாம் ஒவ்வொருவரும் கடவுளோடு கொண்டுள்ள உறவை- சூரியகாந்தி மலருடன் ஒப்பிடலாம். அது நாள் முழுவதும் கதிரவனையே ஆவலோடு எதிர்நோக்குவதுபோல, கதிரவனின் ஒளியையும், கதகதப்பையும் நாடுவதுபோல, அன்னை மரியாவும் இறைவனையே பார்த்துக் கொண்டிருந்தார். சூரியகாந்தி நடப்படும் எந்த இடத்திலும் மலரக்கூடிய ஓர் எளிய மலர். அதுபோலவே அன்னை மரியாவும் இருந்தார். நாமும் இருக்க வேண்டும். சீரான வேர்கள் தாங்கிப் பிடிப்பதால், சூரியகாந்தி செடி உயரமாகவும், நிமிர்ந்தும் நிற்கிறது. மரியாவும் இறைநம்பிக்கை என்னும் வேரின் ஆழத்தால் நிமிர்ந்து நின்றார். சூரியகாந்தியின் எண்ணெய் உணவாகப் பயன்தருவதுபோல, மரியாவின் கனியான இயேசுவும் நமக்கு மீட்பு தந்தார். நாமும் அவ்வாறே பலன் தருவோமாக”.

கி.பி. 431ஆம் ஆண்டு எபேசு திருச்சங்கம் “மரியா இறைவனின் தாய்” என்னும் நம்பிக்கைப் பேருண்மையைப் பறைசாற்றியதன் 1500 ஆண்டுகள் நிறைவாக 1932ம் ஆண்டு பிரான்ட்ஸ்மா ஒரு மரியன்னைப் பாசறையை நடத்தினார். “மரியா கடவுளின் தாய், மனிதரின் தாய்” என்ற தலைப்பில் நடைபெற்ற அப்பாசறை அன்னை மரியாவின் தாய்மை, திறந்த மனம், எடுத்துக்காட்டான நம்பிக்கை ஆகியவற்றிற்கு அழுத்தம் கொடுத்தது. ஒவ்வொரு கார்மல் துறவியும் மற்றொரு மரியாவாக மாறவேண்டும் என்று அழைப்பு விடுத்த பிரான்ட்ஸ்மா, “மரியா கார்மல் துறவியரின் எதிர்நோக்கு” என்ற பட்டத்தையும் மரியன்னைக்கு வழங்கினார். இன்றைய காலத்தில் மரியன்னையின் பிள்ளைகளாக எப்படி வாழ்வது என்பதற்குச் சிறந்த மாதிரி புனித டைட்டஸ் பிரான்ட்ஸ்மா.



**அருள்பணி. குமார்ராஜா**

# இடி தாங்கிய மாதா



### சுவாமி விஜிலியுஸ் சவேரியுஸ் மான்சி

1699 ஆம் ஆண்டு முதல், தூத்துக்குடியின் பங்குக் குருவாக பணியாற்றி வந்தவர், இயேசு சபைக் குரு **விஜிலியுஸ் சவேரியுஸ் மான்சி சுவாமிகள்** (Vigilio Xaverius Mansi).

திருச்சபையின் மிக முக்கிய பொதுச் சங்கமாக கருதப்படும் **திரிதெந்தின் பொதுச் சங்கம்** நடைபெற்ற ஜெர்மனி நாட்டிலுள்ள **திரிதெந்தீ** (Trent) என்னும் நகரில், சுவாமி விஜிலியுஸ் மான்சி 1666 ஆம் ஆண்டு ஜூன் 12 ஆம் நாளன்று பிறந்தார். அங்குள்ள ஆசனக் கோவில் அந்நகரின் முதல் ஆயரான **புனித விஜிலியுஸ்** (St. Vigilio) என்பவருக்கு அர்ப்பணிக்கப்பட்டு இருந்ததால், அப்புனிதரின் பெயரே சுவாமிக்கும் சூட்டப்பட்டது.

1684 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 ஆம் நாளன்று அவர் இயேசு சபையில் சேர்ந்து, குருத்துவப் படிப்பை திரிதெந்தீன் நகரில் முடித்தப் பின் இந்தியாவுக்கு வந்தார். இங்குதான் அவர் தனது சபையின் நான்கு வார்த்தைப்பாடுகளையும் கொடுத்தார்.

### திரிதெந்தீன் நகரில் பனிமய அன்னை

திரிதெந்தீன் நகரில் உள்ள ஆலயமொன்று பனிமய அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டு இருந்தது. இந்த **பனிமய அன்னை** ஆலயத்தின் (Santa Maria Maggiore) வலது பக்கத்திலுள்ள ஒரு சிறிய தூணில் மிகப் பழமையான பனிமய அன்னையின் சுரூபம் ஒன்றுள்ளது. அரியணையில் அமர்ந்த வண்ணம் தனது இடக்கரத்தில் திருமகனை ஏந்திய பனிமய அன்னை, வலக்கரத்தில் கனியொன்றை ஏந்தி திருமகனுக்கு நீட்டுவது போல, காட்சி தருகிறது அந்தச் சுரூபம்.

திரிதெந்தீன் நகரிலுள்ள பனிமய அன்னையின் திருச்சுரூபத்திற்கும், தூத்துக்குடியிலுள்ள பனிமய அன்னையின் அற்புத திருச்சுரூபத்திற்கும் இடையே நெருங்கிய ஒப்புமை இருப்பதாக, தூத்துக்குடி பனிமய அன்னையின் பேராலய வரலாற்றை **'இடியின் இரகசியம்'** என்ற நூலில் எழுதிய **அருட்திரு. எஸ்.வெனான்சியுஸ்** கூறுகிறார்.

### தூத்துக்குடியில் நிலையான அன்னை

இயேசு சபையினரின் தலைமை இல்லம் கொற்கையில் இருந்து மணப்பாட்டிற்கு மாற்றப்பட்டபோது, அப்போதைய பரவர்களின் சாதித்தலைவர் **தொன் கபிரியேல் தெக்குரூஸ் கோமஸ்** (1686-1700), பனிமய அன்னையின் திருச்சுரூபத்தை கொற்கையில் இருந்து தூத்துக்குடிக்கு கொண்டு வந்து, தனது அரண்மனையான பாண்டியபதியில் வைத்து சில ஆண்டுகள் வணங்கி வந்தார்.

1690 ஆம் ஆண்டு தூத்துக்குடி பங்குக் குருவாக சுவாமி விஜிலியுஸ் மான்சி பொறுப்பேற்றவுடன், பரவ சாதித் தலைவர் பனிமய அன்னையின் அற்புத சுரூபத்தை அவரிடம் ஒப்படைத்துவிட்டார்.

தான் பிறந்த திரிதெந்தீன் நகரிலும் ஒரு ஆலயம் பனிமய அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்டு இருந்ததால், சுவாமி மான்சி அவர்களுக்கு பனிமய அன்னையின் மீது தனிப்பற்றுதல் உண்டு. டச்சுக்காரர்களால் பனிமய அன்னையின் திருச்சுரூபத்திற்கு ஆபத்து ஏதும் வரக்கூடும் என்று அஞ்சிய சுவாமி மான்சி, சுரூபத்தை தனது இல்லத்தில் உள்ள தனது அறையிலேயே வைத்து மிகுந்த பக்திச் சிறப்போடு வணங்கி வந்தார்.

**முத்துக்குளிப்பின் வருமானம்**

1702 ஆம் ஆண்டில் தொமினிக் சபையைச் (Dominicans) சேர்ந்த **பேதுரு பச்சேக்கு** (Dom Pedro Pachecco, 1694-1713) என்பவர் கொச்சி ஆயராக இருந்தார்.

முத்துக்குளிப்பின் வருமானம் பற்றி கொச்சி ஆயருக்கும் பரவகுல தலைவர்களுக்கும் இடையே கருத்து வேறுபாடு உருவானது. இயேசு சபையினர் ஆதரித்தப் பரவ தலைவர்கள், ஆயரின் அதிகாரத்திற்கு உட்படாததால், கொச்சி ஆயர் அவர்களைத் திருச்சபையிலிருந்து விலக்கினார். மேலும், முத்துக்குளித்துறையின் ஆலயங்களுக்குள் பரவ குல தலைவர்கள் அனுமதிக்கப்படக் கூடாது என்று ஆணைப் பிறப்பித்தார்.

மலபார் இயேசு சபை மாநிலத் தலைவர் **அந்தோனியோ டி போரஸ்** (Antonio Da Porez) கொச்சி ஆயருக்கு ஒரு மடல் எழுதி, அதில் பரவ குல தலைவர்களிடம் சற்று கருணையோடு நடந்து கொள்ளுமாறு வேண்டினார். ஏழு ஆண்டுகள் நீடித்த இந்த வருமான தகராறும் ஞான அதிகார குழப்பமும் இறுதியில் சுமூகமாக முற்றுப் பெற்றது.

**இடி விழுந்தது**

**1707ஆம் ஆண்டு ஏப்ரல் 4ஆம் நாளன்று** நள்ளிரவில், சுவாமி விஜிலியுஸ் மான்சியின் அறையினுள் திடீரென **இடி விழுந்தது!**

தூத்துக்குடித் திருநகரின் விலைமதிப்பற்ற கருவூலமான பனிமய அன்னையின் அற்புத திருச்சுரூபமும், அன்னையின் பேராலயமும் திருச்சபையின் வரலாற்றில் சிறப்புற்று துலங்குவதற்கு முக்கிய காரணமே, இந்த இடிதான் !

சுவாமி விஜிலியுஸ் மான்சி தூத்துக்குடியிலிருந்து உரோமையிலுள்ள **சுவாமி மரிய இஞ்ஞாசி** என்பவருக்கு 1708 ஆம் ஆண்டு செப்டம்பர் 24 ஆம் நாளன்று எழுதிய மடலில், இடி விழுந்ததைப் பற்றியும் அதன் விளைவுகள் பற்றியும் உணர்ச்சி ததும்ப விளக்கியுள்ளார்.

இந்த மடலின் மூலப்பிரதி, இன்றும் **உரோமை இயேசு சபைப் பழஞ்சுவடி நிலைய**த்தில் பாதுகாக்கப்பட்டு GOA 20. ff. 51, 55 என்ற ஏட்டுத் தொகுப்பில் காணப்படுகிறது.

இத்தாலிய மொழியில் எழுதப்பட்ட இந்த மடலின் தமிழாக்கத்தில் இருந்து சில பகுதிகள் கீழ்வருமாறு :

“கிறிஸ்து இயேசுவில் எனது பேரன்புமிக்க சகோதரன் மரிய இஞ்ஞாசி அவர்களே,

1707 ஆம் ஆண்டு ஏப்ரல் 4 ஆம் நாள் . . . .

வானம் இருண்டு, காற்று பலமாக வீச நள்ளிரவில் இடி இடித்தது. பலத்த இடியோசை கேட்டு பதறி எழுந்த நான், எனது அறையில் பாதுகாத்து வந்த **மரியா மஜோரோ** என்று அழைக்கப்படும் பனிமய அன்னையின் திருச்சிலை முன் மண்டியிட்டேன். அன்னையின் முன் மெழுகுதிரி ஒன்று ஏற்றி வைக்கயெண்ணி, ஊழியன் பேதுரு அந்தோணியை அழைத்தேன். அவன் கொண்டு வந்த விளக்கின் உதவியால் மெழுகுதிரியை ஏற்றி, அன்னையின் சிலை முன் வைத்தேன். அன்னையின் திருச்சிலையை மறைத்திருந்த திரையை விலக்கிவிட்டு, மண்டியிட்டு அன்னையிடம் உருக்கமாக மன்றாடினேன்.

அன்னையின் முன் எரிந்து கொண்டிருந்த மெழுகுதிரி திடீரென தானாகவே அணைந்தது. அணைந்து போன திரியை மீண்டும் ஏற்றி வைப்பதற்காக, தரையைவிட்டு எழுந்து, ஊழியனை அழைத்தேன்.

அப்போது அங்கு இடியொன்று விழுந்தது !

அன்னையின் காலடியில் விழுந்த இடி, மெழுகுதிரியை ஏற்றி வைப்பதற்காக நான் எழுந்த பின்னரே விழுந்தது.

இடியோசையின் பயங்கரத்தை விவரிக்க வேண்டும் என்றால், தூத்துக்குடியிலிருந்து மூன்று காதம் தொலைவிலுள்ள ஒரு ஆலயத்தின் பங்குக்குரு **சுவாமி இஞ்ஞாசி தா கோஸ்தா** (Ignaci da Costa) தன் மேலேயே இடி விழுந்தது போல் உணர்ந்ததாக மறுநாள் கூறினார்.

இப்படியொரு பயங்கரமான இடி விழுந்த பின்னரும்கூட நானும், எனது இரு ஊழியர்களான பேதுரு அந்தோணி, அருளப்பன் ஆகியோரும் உயிர் பிழைத்திருப்பது மாபெரும் அற்புதமே!

எங்கள் உயிர் காத்த அன்னைக்கு, இடி விழுந்த அதே இடத்தில், மூவரும் ஒன்று சேர்ந்து மண்டியிட்டு நன்றி கூறினோம்.

சரியாகப் பனிமய அன்னையின் திருச்சிலை மீது விழுந்த இடியினால், அன்னையின் திருச்சிலை கறைபட்டு கருநீலமாகியதே தவிர, எவ்விதப் பழுதோ உடைசலோ இன்றி முற்றிலும் அற்புதத் திருச்சிலையாகவே காட்சியளித்தது! அன்னையின் திருக்கரத்தில் ஏந்திய குழந்தை இயேசு இடியினால் கறைபட்டுக் கருமை நிறமாக தோன்றினார்.

மறுநாள் பொழுது விடிந்ததும், மக்கள் பெருந்திரளாக எனது இல்லம் முன் கூட ஆரம்பித்தனர்.

இடி தாங்கிய அன்னையின் அற்புத திருச்சுரூபத்தை பொது வணக்கத்திற்காக ஆலயத்தில் வைத்தேன். அன்று திருச் சுரூபத்திற்கு முன்னால் திருப்பலி பூசையும் நிறைவேற்றினேன்.

அன்னையின் திருச்சிலையானது தனது மாறுப்பட்ட தோற்றத்தினால் இன்னும் அதிக அற்புதமும் புதுமையும் நிறைந்ததாகிவிட்டது. இங்குள்ள மக்கள் இந்த அன்னையை **பனிமய மாதா** (தஸ் நேவிஸ்- Signora Das Nevis) என்று அழைப்பதற்குப் பதிலாக, தவறான உச்சரிப்பில் **படகின் மாதா** (தஸ் நாவிஸ் Signora Das Navis) என்றே அழைத்து வருகின்றனர்.

இங்கு வருகை தந்திருந்த இயேசு சபை மாநிலத் தலைவர், அற்புத அன்னையின் திருமுகத்தை ஒரு துணியைக் கொண்டு துடைத்தபோது, இடியினால் உண்டான கறைகள் முழுவதுமே நீங்கியது.

அன்னை மரியாளின் திருநாமத் திருநாளான செப்டம்பர் 11 ஆம் நாளன்று. இங்குள்ள பரவ மக்கள், அன்னைக்கு விழா எடுத்து விமரிசையாகக் கொண்டாடினர். அன்னையின் அருளால் இந்த ஆண்டு மக்கள் செழிப்பான முத்துக்குளிப்பைப் பெற்றனர்.

மக்கள் வழங்கிய தாராள முத்துக் காணிக்கையைக் கொண்டு, தங்கக் கம்பியினால் கோக்கப்பட்ட 150 முத்துக்களைக் கொண்டு செபமாலைகள் இரண்டைச் செய்து அன்னையின் கரத்திலும் அவளது திருமகனின் கரத்திலும் அணிவித்தேன்.

அன்னையின் புதுமைகளை உலகமெங்கும் பறைசாற்ற கடமைப்பட்டு, இந்த மடலை பிரான்ஸ் (France) மார்க்கமாகப் **பாரீஸ் அந்நிய வேத போதக சபைக் குருக்களின்** (Foreign Mission Society of Paris) மாநிலத் தலைவர் **காயுஸ் தச்சர்ட்** மூலம் தங்களுக்கு அனுப்புகிறேன்"

இப்படிக்கு,

கிறிஸ்துவில் அன்புள்ள,

விஜிலியுஸ் சவேரியுஸ் மான்சி

தூத்துக்குடி 24, செப்டம்பர், 1708

இடி விழுந்த நாள் முதல் பனிமய அன்னையின் அற்புத சுரூபம் மூலம் நிகழ்ந்த பல அற்புதங்களைப்பற்றி, 1709 ஆம் ஆண்டின் இயேசு சபை அறிக்கையில் சுவாமி **பிரான்சிஸ் வைஸ்** இயேசு சபைத் தலைவர் **தம்பூரிணி மிக்கேல் ஆஞ்சலா**வுக்கு (Tamburini Michael Angelo) எழுதியுள்ளார்.


*- (தொடரும்)*



**தி. சொர்ணராஜன் விக்டோரியா**

மாதம் ஒரு மாதா படம் : 28

# புதிய ஆசிகளின் தாய்!



ஓவியர் ஜெயராஜ்

8



# பனிமய அன்னை பேராலய மலரும் நினைவுகள்...

## (1930 - 1954)

திருஇருதயங்களின் பேராலயப் பங்குப் பணித்தளத்தில் ஏறத்தாழ பதினேழு ஆண்டுகள் தொடர்ந்து திறம்பட பணியாற்றிய பழுத்த அனுபவ முதிர்ச்சியோடு பரிசுத்த பனிமய அன்னை ஆலயப் பங்கு நிர்வாகப் பொறுப்பை அருள்தந்தை சிலுவைமுத்து தல்மெய்தா அடிகளார் 1954ஆம் ஆண்டு சூன் மாதம் நான்காம் நாள் ஏற்றெடுத்தார்கள்.

பங்குத்தந்தை என்ற பொறுப்பின் நிலைப்பாட்டை, தனது நீண்ட கால நிர்வாகத்தில், பாதிக்காத விதத்தில் பண்போடும் பாசத்தோடும் மக்களை அன்பொழுக அநுசரித்துப் போன பான்மையினால், பெரியகோயில், சின்னக்கோயில் என மக்களிடையே புரையோடிக் கிடந்த பழைய பிளவுகளும் வேற்றுமைகளும் மெல்ல மெல்ல நீர்த்துப் போகச் செய்திருந்தார்கள்.

அன்னையின் ஆலயப் பொறுப்பை அவர் ஏற்றெடுத்த காலத்தில் ஆலயத்தில் வார நாட்களில் காலையில் இரண்டு திருப்பலி களும் ஞாயிற்றுக் கிழமைகளில் காலையில் மூன்று திருப்பலிகளும், மற்றும் சனி, ஞாயிறு ஆகிய நாட்களில் மாலை 4.30 மணிக்கு நற்கருணை ஆசீரும் மாத்திரம் நடைபெறும். ஞாயிறு புதன் ஆகிய நாட்களில் முற்பகல் 10.30 மணிக்கு ஞானஸ்நானம் நடைபெறும். வேறு கூட்டுப் பக்தி முயற்சிகள் பொதுவாக நடப்பதில்லை.

அன்னையின் திருவிழாக் காலங்களில் சூலை 26ஆம் தேதி கொடியேற்றம் - முதல் ஞாயிறு அன்று நான்கு மூலைகளில் நற்கருணை திருவிழா - காலையில் பல திருவழிபாடுகள் - பகல் தேர்ஸ் - என 10 நாட்கள் ஆடம்பரமாக கொண்டாடப்பட்டு 11ஆம் நாளாகிய ஆகஸ்டு 5ஆம் நாள் வெகு விமரிசையாக திருவிழாக் கொண்டாடப்படும். அவைபோக மார்ச் மாதம் சூசையப்பர் நவநாளும் மே மாதம் அன்னையின் ஜெபமாலை ஆசீரும் நடைபெறும். மற்றபடி மக்களுக்கும் ஆலயத்திற்கும் அதிக தொடர்பில்லாமையை கண்டு அதற்கு ஏதாவது செய்ய வேண்டுமென சிந்தித்தார்கள்.

பெங்களூரிலிருந்து இரட்சகர் சபை குருக்களை வருவித்து வியாழக்கிழமை மாலைதோறும் சகாயமாதா நவ நாட்களைத் தொடங்கினார். ஆண்டு முழுவதும் நடைபெற்ற பக்தி முயற்சி மக்களிடையே மிகுந்த ஈடுபாட்டை ஏற்படுத்தியது. மக்கள் விண்ணப்பங்களை சமர்ப்பிப்பதும் ஆசீர்வாதத்தின்போது அவற்றை வாசித்து ஜெபிப்பதும், நன்றியறிதல் கடிதங்கள் வாசிக்கப்படுவதும் மக்களுக்கும் ஆலயத்திற்கும் இடையே ஒரு புதிய ஆன்மீக நெருக்கத்தை ஏற்படுத்தியது.

அருள்தந்தை நிர்வாகப் பொறுப்பெடுத்து இரண்டு மாதங்கள் ஆகுமுன்பே பரிசுத்த பனிமய அன்னையின் திருவிழா சூலை மாதம் 26ஆம் தேதி தொடங்கிற்று. திருநாள்



கொடியேற்ற நாளுக்கு முந்திய ஞாயிற்றுக்கிழமை கோயிலில் மணிப்பிரவாள நடையில் வாசிக்கப்பட்ட 'திருநாள் பிரகடனம்' மக்கள் மனத்தில் ஒரு வேண்டுகோளைத் தூண்டி எழுப்பியது. அன்னையின் அழகு திருச்சுரூபம் 1555ஆம் ஆண்டு சூன் மாதம் ஒன்பதாம் தேதி தூத்துக்குடிக்கு வந்ததாக ஒரு பழைய பற்றூகப் புகல்வு பரவலாக நம்பப்பட்டது. எனவே 1955ஆம் ஆண்டு திருவிழாவை 400 ஆண்டு நிறைவின் நினைவாக தேர்த் திருவிழாவாகக் கொண்டாட வேண்டும் என்ற வேண்டுகோள் எழுந்தது. அவ்வேண்டுகோளின் அழுத்தம் அதிகமாகவே ஆயர் மேதகு தாமஸ் பர்னாந்துவின் அனுமதி பெற்று 1955 ஜனவரி ஒன்றாம் தேதி ஆலயத்தில் அறிக்கையிடப் பட்டது.

1947ஆம் ஆண்டு தேரோட்டத்தின்போது எழுந்த பிரச்சனைகளின் காரணிகள் மழுங்கிப் போய்விட்ட காரணத்தால் முட்டலோ மோதல்களோ இல்லாது சுமூகமான ஒரு சூழ்நிலை நிலவியதால் 1955ஆம் ஆண்டு தேர்பவனி வெகு ஆடம்பரமாக நடந்து முடிந்தது. அருள்தந்தையவர்களின் சாமர்த்தியமான நிலைபாடும் நேத்திரத்துவமும் அதற்கு மிகமிக உறுதுணையாய் இருந்தது.

ஆடம்பர அலைகள் ஓய்ந்து நடந்து முடிந்து திருவிழாவிற்குப் பிறகு நாட்களும் மாதங்கள் சிலதும் உருண்டோடி மறைந்ன.

ஒருநாள் யாரோ ஒருவர் ஒன்றரை அடி உயரமுள்ள அழகிய பாத்திமா மாதா சுரூபத்தை அருள்தந்தையிடம் மந்திரிக்கக் கொண்டு போயிருக்கிறார். மாதாவின் அழகிய முகத்தைப் பார்த்த தந்தையர்கள் எங்கே வாங்கினீர்கள் என்று கேட்க "போர்த்துக்கல் நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டது" என்றாராம். உடனே தந்தையவர்கள் "இது உங்கள் வீட்டில் மாத்திரம் இருக்கக்கூடாது - இந்த பங்கில் உள்ள எல்லோர் வீட்டிலும் இருக்க வேண்டும்" - எனச் சொல்ல, கேட்டவர் புரியாமல் விழிக்க - தந்தையவர்கள் விளக்கம் அளித்தார்களாம். "அதாவது ஒருநாள் காலை முதல் மறுநாள் காலை வரை ஒவ்வொரு வீட்டிலும் கொலுவீற்றிருந்து, ஜெபமாலை, பிரார்த்தனை, பாடல்கள் என நாள் முழுவதும் அந்தந்தத் தெருவிலுள்ள குடும்பங்கள் ஒன்றுவிட்டு ஒன்றாகச் சென்று மாதாவை மகிமைப்படுத்த வேண்டும்" என்று சொன்னார்களாம். மந்திரிக்கக் கொண்டு வந்தவர் மாதா சுரூபத்தை அருள்தந்தையிடமே கொடுத்து ஆரம்பித்து வையுங்கள் சுவாமி என்று விடைபெற்றாராம்.

அமலோற்பவ மாதா வாலிபர் சபை ஆண்கள் பொம்பெய் மாதா பெண்கள் சபையோர் சிலரோடு சேர்ந்து ஆரம்பித்து வைத்த பக்தி முயற்சி மிக வெற்றிகரமாக பங்கின் எல்லோர் வீடுகளுக்கும் புதியதொரு மாதாவின் மகிமையைக் கொண்டு சேர்த்தது. ஒவ்வொரு நாள் மாலை 7 மணி அளவில் அருள்தந்தை எஸ்.எம். தல்மெய்தா அவர்களே நேரில் மாதா சுரூபம் இருக்கும் வீட்டிற்குச் சென்று சிறுவழிபாடு நடத்தி மறையுரையாற்றி சுரூப ஆசீர் அளித்து ஒரு புதிய பக்தி முயற்சியை நடத்தி மக்கள் மனத்தை கவர்ந்தார்கள்.

*- (தொடரும்)*



**செல்வராஜ் மிராந்தா**

# 'பனிமயம்' 2006 – மீள் பார்வை



இறைவார்த்தையைக் கேட்டு அதன்படி நடந்தால் வரும் ஆசீர்வாதங்கள் சில –

★ "கொள்ளை நோய்களை உன்மேல் வரவிடமாட்டேன். ஏனெனில், நானே உன்னைக் குணமாக்கும் ஆண்டவர்" (விப 15:26).

★ "உங்கள் கருவின் கனிகளும், நிலத்தின் விளைவுகளும், கால்நடைகளும் பெருகும்படி ஆசி வழங்குங்கள். மற்றெல்லா மக்களினங்களையும்விட நீங்கள் ஆசி பெற்றவர்களாய் இருப்பீர்கள்."

★ "எல்லா நோய்களும் உங்களிடமிருந்து அகலும்படி ஆண்டவர் செய்வார்" (இச 7:12).

★ "நீ மேற்கொள்ளும் செயல்கள் அனைத்திலும் நீ ஆசி பெறும்படி ஆண்டவர் ஆணையிடுவார்." ( 28:12.13)

★ "நீ உயர்வாயேயன்றித் தாழ்ந்து போக மாட்டாய்" (இச )

–பிலிப் இம்மாகுலேட்

**வாழ்ந்து காட்டிய மாமனிதர்கள்**

என்ற தலைப்பில்,

சங்கைக்குரிய திருக்குடும்ப தாசன் தல்மேதா சுவாமி "(Fr. T.K.D.)

- வின்சென்ட் செபமாலை பர்னாந்து – ரொசாரியம்மாள் ரொட்ரீக்ஸ் இணையர்
- செவாலியர் J.L.P. ரோச் விக்டோரியா
- மேதகு தாமஸ் பர்னாண்டோ ஆயரவர்கள்
- ஏழைகளின் தந்தை அருட்திரு. பவுல் அலங்காரம் அடிகளார்
- அப்பன் மேதகு பிரான்சிஸ் திபூர்சியுஸ் ரோச் ஆயரவர்கள்

ஆகியோரின் உன்னதமான வாழ்க்கையைப் போற்றிப் பாராட்டியிருக் கிறார் கலாபன் வாஸ்.

**CHRISMA**

CHRIST CHILD என்பது பொழுது போக்கிற்காக விளையாடும் விளையாட்டல்ல. நம்முடைய அன்பைப் பகிர்ந்து கொள்ள, புது நண்பர்களோடு உறவாட, கடவுள் நமக்குத் தந்த பெரிய பரிசு 'கடவுளின் தாய்' (CHRISMA) ... 'கடவுளின் குழந்தை' (CHRIST CHILD). நாம் பிறருக்காக, அதுவும் நமக்குத் தெரியாத நபர்களைப் பற்றி அறிந்து, அவர்களுக்காகச் செபிக்கும்போது, கடவுளின் அன்பையும் இரக்கத்தையும் நாம் பெறுகிறோம். இதேபோல், நீங்களும் ஒரு குழுவாக அமர்ந்து இவ்விளையாட்டின் மூலம் நட்பினை – அன்பினைப் பகிர்ந்து மகிழலாம். – மலர் ஆஸ்வால்ட்.

**குடும்பத் தத்துவம்**

திருமணமாகி புதுவீடு சென்றபின், பெண் தன் தந்தையைப் போலவே ஆதரவையும், பாதுகாக்கும் பாசத்தையும் கணவனின் மூலம் பெற்றுவிடுகிறாள். தாயின் அன்பு மட்டும்தான் பறிபோகிறது.

ஆனால், ஆண்மகன், தன் தாய்க்கு நிகரான பாசத்தையும் அரவணைப்பையும், தன் மனைவி மூலம் பெற்றுவிடுகிறான். தந்தையின் அன்புதான் கிடைக்காமல் போகிறது.

எனவே, பெண்ணின் மாமியார், தாயைப் போல அவளைப் பேணவும், ஆணின்





மாமனார், ஓர் தந்தை ஸ்தானத்தில் பாசமாகவும் இருந்து குடும்பங்களைக் குதூகலமடையச் செய்ய வேண்டும். - ஜே. பாத்திமா அன்டோ.

★ கிறிஸ்தவர் ஒவ்வொருவரும் தான் வாழும் சமூகத்திற்காகத் தன்னையே அழிக்கும் அளவுக்குத் தன்னையளிக்க வேண்டும். ஹென்றி நியூமன் கூறுவதுபோல, "பிறரன்புப் பணியில்லாத கிறிஸ்தவன், கிறிஸ்தவனே அல்ல' என்பதை உணர்ந்தவர்களாய் வாழவேண்டும்.

"தந்தை இரக்கமுள்ளவராயிருப்பது போல், நீங்களும் இரக்கமுள்ளவராய் இருங்கள்" (லூக் 6:38) அழைப்புவிடுக்கும் புனித லூக்கா, நான்கு வழிமுறைகளை முன்வைக்கிறார். அவை -

- பகைவரிடம் அன்பு (6:26-28)
- உடைமையைப் பகிர்தல் (6:29)
- கடன் கொடுக்கல்-வாங்கல் (6:30)
- தீர்ப்பிடாதீர்கள் (6:37).
- ஜீப்ரான்

**சின்னஞ்சிறு கதை**

கத்தோலிக்கத் தேவாலயம். ஞாயிறு திருப்பலியில், "அன்பே கடவுள்.... கடவுளே அன்பு... அதுவே உண்மை" என்று குருவானவர் ஆவேசமாக மறையுரையாற்றிக் கொண்டிருந்தார்.

அனைவரும் தூங்கி வழிந்து கொண்டிருந்தனர். சோம்பிக் கிடந்தனர். பார்த்தார் சாமியார்.... பலம் கொண்ட மட்டும் அலறினார்!

"ஐயோ தீ... தீ... ஆலயத்தில் தீ!....!"

"எங்கே? எங்கே தீ?..." அனைவரும் விழித்தெழுந்தனர்... பரபரப்பாயினர்!

குரு மௌனமாகச் சொன்னார்... "நான், அன்பே கடவுள் என்று உண்மையை உரைத்தேன்.... நீங்கள் எல்லாரும் தூங்கி வழிந்தீர்கள்..... ஆனால், நான், தீ... தீ... என்று பொய் சொன்னேன்... எல்லாரும் விழித்தெழுந்தீர்கள்... பரபரப்பானீர்கள்...

நீங்கள் உண்மைக்குத் தூங்குகிறீர்கள்...

பொய்க்கு விழித்தெழுகிறீர்கள்...!

உண்மையைவிட, பரபரப்பானது பொய்!

**குடும்ப வாழ்வு**

திருமண அன்பிற்குரிய தியாக உணர்வு வெளிப்பட வேண்டிய ஒரு முக்கிய துறை, தவறுகளை மன்னிப்பது. தவறு செய்வது மனித இயல்பு. எவ்வளவுதான் அன்பும், அறிவும் உள்ள கணவன்-மனைவியாக இருந்தாலும், அறிந்தோ அறியாமலோ, அவர்கள் தங்களது குடும்ப வாழ்வில் தவறுகள் பல இழைத்து விடுகிறார்கள். சாதாரணக் குடும்ப வாழ்வில் நிகழும் பெரும்பாலான தவறுகளுக்கும் காரணம், கணவன் அல்லது மனைவியின் சிந்திக்காமையும், கவனமின்மையுமேயாகும். இல்லையெனில், சுயநலம் காரணமாக அமையலாம். இத்தகைய சூழ்நிலையில் மன்னிப்புக் கேட்பதும், மன்னிப்பதும் திருமண உறவின் வளர்ச்சிக்கு இன்றியமையாதது. - முனைவர் அருட்பணி தே. அல்போன்சு.

"இயேசு, ஞானத்திலும் உடல் வளர்ச்சியிலும் மிகுந்து, கடவுளுக்கும் மனிதருக்கும் உகந்தவராய் வாழ்ந்து வந்தார்" (லூக் 2:52) என்ற இறைவாக்கு, புனித யோசேப்புக்குப் பெருமை சேர்ப்பதுபோல், இன்றையப் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் பயின்று வரும் மாணவச் செல்வங்கள் அனைவருக்கும் இறந்த காவலராய், வழிகாட்டியாய் புனித யோசேப்பு விளங்குகிறார். - அருட்தந்தை J. இரத்தினராஜ்.

★ தேவதையைத் தேடி வந்தோம் - எம்
தேவையை நிறைவேற்ற!
கேட்கக் கேட்கக் கொடுத்தவளும்
நீதான் - எங்களை
மீட்க வந்த விமலியும் நிதான்!
எங்களை, பாதுகாக்கும் மாது நீயம்மா!
சூரிய சந்திர நட்சத்திரங்களோடு
நீ இருந்தாலும்,
பூமியையே சுற்றி வருபவளே!
நீ வாழ்க... வாழ்க...
- லியோனா சில்வேரா



**கலாபன் வாஸ்**
94863 90793

நம் திருச்சபை, நமது பெருமை - 7

# மரபு மன்றாட்டுகள்!

*சென்ற இதழ் தொடர்ச்சி...*

**8. "கிறிஸ்துவின் ஆன்மாவே"** என்னும் அருமையான செபம் 14ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தது. திருத்தந்தை 22ஆம் ஜான் இம்மன்றாட்டை இயற்றியிருக்கலாம் என்று கருதப்படுகிறது. 1370ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் இந்த மன்றாட்டின் பிரதி இருந்தது என்றால் இதன் தொன்மையை அறிந்துகொள்ளலாம். என்றாலும், 16ஆம் நூற்றாண்டில் புனித லொயோலா இஞ்ஞாசியார்தான் இச்செபத்தைப் பிரபலமாக்கினார். இன்றளவும் பல கோவில்களில் நற்கருணை வாங்கியபிறகு இது செபிக்கப்படுகிறது, அல்லது பாடப் படுகிறது என்பது இச்செபத்தின் மேன்மையை எடுத்துக்காட்டுகிறது.

**9. "தேதேயும்"** (Te Deum Laudamus) என்ற புகழ்பெற்ற இலத்தீன்மொழி நன்றிப் பாடல் சில ஆண்டுகள் முன்பு வரை முந்தைய தலைமுறையினரால் மனப்பாடமாகப் பாடப்பட்டுவந்தது. இப்போது இதனை நாம் பாடாமலிருக்கலாம். ஆனால், அதன் தமிழ் வடிவமான "இறைவா உம்மை வாழ்த்துகிறோம், ஆண்டவர் நீரெனப் போற்றுகிறோம்" என்னும் நன்றிப் பாடல் திருவிழாக்களின்போதும், நன்றி நிகழ்வுகளின் போதும், சில பங்குகளில் திருமண அறிக்கைகள் வாசிக்கப்பட்டதைத் தொடர்ந்தும், உற்சாகமாகப் பாடப்பட்டு வருகிறது. இன்றும் திருப்புகழ்மாலையின் முகாமையான இறைபுகழ்ப் பாடல்களுள் இதுவும் ஒன்று.

இம்மன்றாட்டு புனித அகுஸ்தினாரின் திருமுழுக்கு விழாவுக்காக புனித அம்புரோசியாரால் இயற்றப்பட்டது என்றும், கி.பி. 387ஆம் ஆண்டு உயிர்ப்புப் பெருவிழாவின்போது மிலான் ஆசனக் கோவிலில் புனித அம்புரோசால் அகுஸ்தின் திருமுழுக்கு பெற்றபோது இப்பாடல் பாடப்பட்டதாகவும், அப்போது பேராலய மணிகள் ஒலித்தன என்றும் மரபு சொல்கிறது.

"அம்புரோசியாரின் பாடல்" என்றும் அழைக்கப்படும் இம்மன்றாட்டு, கத்தோலிக்கர் களால் மட்டுமல்ல, ஆங்கிலிக்கன் சபையினர், லூத்தரன் சபையினர், மெதோடிஸ்ட் சபையினர் போன்ற பிரிந்த சகோதரர்களாலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்பது எத்துணை பெருமை வாய்ந்தது.

**10. "ஆண்டவரே, என்னை அமைதியின் கருவியாக்கும்"** என்பது இன்னொரு பிரபலமான கத்தோலிக்க மரபு மன்றாட்டு,



புனித பிரான்சிஸ் அசிசியாரின் மன்றாட்டு, அமைதியின் மன்றாட்டு என்றெல்லாம் அறியப்படும் இது 13ஆம் நூற்றாண்டில் இயற்றப்பட்டது. நாடுகளுக்கிடையேயும், மனிதர்களுக்கிடையேயும் சமாதானத்தை மன்றாடுவதால் முதல் உலகப் போர், மற்றும் இரண்டாம் உலகப் போருக்குப் பின் உலகம் முழுவதும் பரவலாக செபிக்கப்பட்ட செபம். கிறித்தவரல்லாத பலருக்கும்கூடப் பிடித்தமான ஒரு மன்றாட்டு. நிறுவனங்களில், அலுவலகங்களில், பள்ளிகளில் இந்த செபம் எழுதப்பட்டிருப்பதை எத்தனையோ பேர் பார்த்திருக்கின்றனர், அதனுடன் ஒன்றித்திருக்கின்றனர். அன்னை தெரசா, மார்கரட் தாட்சர், பேராயர் டெஸ்மண்ட் டுட்டு, அப்துல் கலாம் போன்ற பிரபலங்கள் பயன்படுத்திய செபம். 1967ஆம் ஆண்டு செபாஸ்டியன் டெம்பிள் என்னும் தென் ஆப்ரிக்க இசையமைப்பாளரால் மெட்டு அமைக்கப்பட்டபிறகு இன்னும் புகழ் பெற்றது. இளவரசி டயானாவின் அடக்கச் சடங்கில் இப்பாடல் இசைக்கப்பட்டது, மொனாக்கோ இளவரசர் ஆல்பர்ட்டின் திருமணச் சடங்கில் பாடப்பட்டது என்பவையெல்லாம் நம்மைப் பெருமைப்படுத்தும் தகவல்கள்.

**11. மூவோர் இறைவனுக்குப் புகழ்.** "தந்தைக்கும், மகனுக்கும், தூய ஆவியாருக்கும் மாட்சி உண்டாவதாக.



தொடக்கத்தில் இருந்ததுபோல இப்பொழுதும் எப்பொழுதும் என்றென்றும் இருப்பதாக, ஆமென்" என்னும் மூவோர் இறைவனுக்குப் புகழ் (Trinitarian Doxology) மிகவும் தொன்மை வாய்ந்த ஒரு மன்றாட்டு, கி.பி. 380 ஆண்டில் இயற்றப்பட்ட இது உண்மையில் நிசேயா நம்பிக்கை அறிக்கையிலிருந்து தோன்றியது. இன்றளவும் கத்தோலிக்கர்கள் தவிர, லூத்தரன் மற்றும் ஆங்கிலிக்கன் சபையினராலும் பயன்படுத்தப்படும் ஒரு மன்றாட்டு.

**12. திருச்சிலுவை அடையாளத்தினாலே.** சிலுவை அடையாளம் வரையும்போதெல்லாம் நாம் சொல்கிற "திருச்சிலுவை அடையாளத்தினாலே எங்கள் தீயவரிடமிருந்து எங்கள் இறைவா, தந்தை, மகன், தூய ஆவியாரின் பெயராலே, ஆமென்" என்னும் மன்றாட்டும் மிகவும் பழமை வாய்ந்தது. கி.பி. 200ஆம் ஆண்டில் கார்த்தூஜில் வாழ்ந்த தெர்த்துல்லியன் என்னும் திருஅவைத் தந்தை "கிறித்தவர்களாகிய நாம் நெற்றியிலே சிலுவை அடையாளம் வரைகிறோம்" என்று எழுதியிருப்பது நம்மை வியக்க வைக்கிறதல்லவா?

மேற்கண்ட 12 மிகவும் புகழ்பெற்ற மரபு மன்றாட்டுகள் தவிர, உணவுக்கு முன் செபம், உணவுக்குப் பின் செபம், காவல் தூதரை நோக்கி செபம், மிக்கேல் அதிதூதருக்கு மன்றாட்டு, புனித அந்தோனியாரை நோக்கி மன்றாட்டு என இன்னும் எத்தனை, எத்தனையோ மரபு மன்றாட்டுகளைக் காலம் காலமாக நாம் செபித்து வருகிறோம். சில நேரங்களில் அவற்றின் தொன்மையையும், பெருமையையும் அறியாமலே!

இவைகளெல்லாம் காலத்தை வென்ற, ஆற்றல்மிக்க செபங்கள் என்பதை உணர்ந்து தலைநிமிர்வோம். இந்த அருமையான மரபு மன்றாட்டுகளை நமது அடுத்த தலைமுறையினருக்குக் கற்றுத் தந்து, செபிக்கவைத்து விலைமதிப்பில்லா இப்புதையல்களைப் பாதுகாப்போம்.

**"க்றிஸ் மிலியன்"**

# விவிலியப் போட்டி 84

தயாரித்தவர் : சகோ. பிரகாசி FBS

## யாக்கோபு திருமடல்

**கோடிட்ட இடத்தை நிரப்புக. விடைகளில் அதிகாரம், வசனம் எழுதவும்.**

1. உனக்கு அடுத்திருப்பவர்மீது என்ன செய்யவேண்டும்?
2. எந்த விதையிலிருந்து நீதியெனும் கனி விளைகிறது?
3. ஆண்டவரின் வருகைவரை நாம் எப்படி இருக்க வேண்டும்?
4. செல்வச் செழிப்பில் இருப்பவர்கள் தாழ்நிலை அடையும்போது எப்படி இருப்பார்கள்?
5. ஆண்டவர் தாழ்நிலையிலுள்ளவர்களுக்கு எப்பண்பைக் காட்டுவார்?
6. எது தீர்ப்பை வெல்லும்?
7. ஆபிரகாம் ஆண்டவர்மீது என்ன கொண்டிருந்தார்?
8. ஞானத்தின் தலையாய பண்பு எது?

**விடைகள் அனைத்தையும் கோர்த்தால், புத்தாண்டின் நற்பண்புகள் கிடைக்கும்.**

# விவிலியப் போட்டி 83

## டிசம்பர் 2021 — விடைக்குறிப்புகள்

### உரோமையர் திருமடல்

| | | |
|---|---|---|
| 1. | உரோமையர்-9:33 | இதோ |
| 2. | உரோமையர்-8:34 | நமக்காகப் |
| 3. | உரோமையர்-9:6 | பிறந்த |
| 4. | உரோமையர்-9:10 | குழந்தை |
| 5. | உரோமையர்-4:22 | அதை |
| 6. | உரோமையர்-12:2 | பெற்று |
| 7. | உரோமையர்-7:8 | தந்த |
| 8. | உரோமையர்-16:13 | அன்னை |
| 9. | உரோமையர்-4:6 | பேறுபெற்றவர். |

*இம்மாதச் செய்தி:*

**“இதோ, நமக்காகப் பிறந்த குழந்தை. அதைப் பெற்றுத் தந்த அன்னை பேறுபெற்றவர்.”**

## உங்கள் கவனத்துக்கு

பனிமய அன்னை பேராலயப் பங்கைச் சேர்ந்தவர்கள் விடைகளுடன் தங்கள் பெயர், அன்பியப் பெயர், குடும்ப அட்டை எண் மூன்றையும் ஒரு தாளில் எழுதி பங்கு அலுவலகத்தில் சேர்க்கவும். ஒரு குடும்பத்துக்கு ஒருவர் விடை எழுதினால் போதும். பிற பங்குகளைச் சேர்ந்தவர்கள் மட்டும் விரும்பினால் விடைகளை வாட்ஸ்அப்பிலும் இந்த எண்ணுக்கு அனுப்பலாம் : 88709 26751.

**அலைபேசி எண் மாற்றத்தைக் கவனியுங்கள்.**

**விடைகள் வந்து சேரவேண்டிய கடைசி நாள் : 15.01.2022**

**விடை அனுப்பியவர்கள் மொத்தம் : 153**

**பரிசு பெறுபவர்கள் : 2**

1. பனிமய அன்பியம் - ஒருவருமில்லை
2. பரிபூரண மாதா அன்பியம் - ஒருவருமில்லை
3. பவுலடியார் அன்பியம் - **ஜான்சன் ஓஃபிலியா**
4. பொம்பெயி மாதா அன்பியம் - **டிஃபானி அண்டோ**

## I. பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து சரியான விடை எழுதியவர்கள் : 87

## விடை எழுதிய அன்பியங்கள் : 25

## பனிமய மாதா பேராலய அன்பியங்களிலிருந்து பாராட்டுக்குரியவர்கள் : 85

1. அருள்சகோ. ரோசம்மாள்

**அந்தோனியார் அன்பியம்**
2. சரோஜா
3. ஜெயா
4. பிருந்தா சார்லஸ்
5. சோஃபியா
6. லூக்காஸ்

**அன்னை தெரசா**
7. ரெய்சா சுஜய்
8. சுகன் மோனிஷா
9. சுரேஷ் பிரேமா
10. ரொபினா

**அன்னை வேளாங்கன்னி**
11. டென்சி
12. மெடோனா ஜோசப்
13. ஆரோன் ஷாரோன்

**கிறிஸ்தரசர்**
14. ஜூலியட் சாவியோ
15. ஸெலஸ்கி கிளமென்ட்
16. ரெக்ஸ் க்ரீன்வெல்
17. லூரட் வசந்த்
18. இவாஞ்சலின்

**தஸ்நேவிஸ் மாதா**
19. இருதயம்மாள்
20. ஸ்டெனிதிவாஸ்
21. பிருந்தாதிவான்

**திவ்ய பாலன் அன்பியம்**
22. சகாயராணி தனராஜ்
23. பிரின்சி சே.

**பாத்திமா மாதா**
24. ஜெசிந்தா கான்ஸ்டன்
25. டாரல் தீத்தோனிஸ்
26. ஜஸ்டின் ஸ்னோகுளோரி

**இரக்கத்தின் மாதா**
27. சித்ராமோத்தா
28. பிரைட்டன் ஜெரோபின்
29. இருதயம்மாள் கொன்சால்

**ஜெபமாலை மாதா**
30. ப்ரிஜிட்
31. சகாயம்மாள் பெனடிக்ட்
32. கல்யாணி செல்வராஜ்

**ஜூடு அன்பியம்**
33. மேக்லிட்டா
34. டிரைபேனா
35. அரிஸ்டோ
36. அந்தோனிசாமி

**காவல் தூதர்**
37. ஆரோக்கிய டெய்சி
38. வெனிட்டாள்
39. ஜெயா அகஸ்டின்
40. ஹசினா
41. ட்ரினிஷா

**குழந்தை தெரசா**
42. கிறிஸ்டி லிஸ்டன்

**குழந்தை இயேசு**
43. லியான்டின் சஹானா
44. ரதிபிரதீப்
45. அந்தோனியப்பா பிச்சம்மாள்
46. மோனிகா செபாஸ்டின்
47. கிறிஸ்லின்

**லூர்துமாதா**
48. ஆலிவர் ஜெனோரா
49. ஃபிலோ கோமஸ்
50. ஜெனோ சேவியர்
51. ரம்யா
52. ரஜூலா
53. ஆர்லின் தாமஸ்
54. செல்வி தல்மேதா

**மணல் மாதா**
55. கெயிட்டன் ஃபர்னான்டோ
56. ரொசாரி கோமஸ்
57. ஹெபிட்டா

**மிக்கேல் அதிதூதர்**
58. வினோஅந்தோனி
59. அன்சிகா

**பவுலடியார்**
60. லீமாரோஸ் ஜாய்
61. ராஜா ரோஸ்லின்

**பொம்பெயி மாதா**
62. டயானா டெரிக்
63. லூடா கான்ஸ்டன்
64. வேன்சி பிரின்ஸ்
65. ஜான்சி ராணி

**இராயப்பர்**
66. இந்திரா ரெஃப்லின்
67. ஷைனி

**சவேரியார்**
68. டெலிலா அமலன்
69. ரூபா மனுவேல்
70. அண்டன் சகாயம்
71. பிரின்சி ஆக்னல்
72. ஆரோக்கியராஜ் ஹெலினா

**செபஸ்தியார்**
73. அந்தோனியம்மாள் டென்சிங்
74. ஜெசிலா சேவியர்

**சிந்தாத்திரை மாதா**
75. டிஜேபிஆர் இராயன்
76. நேசம்

**சிறுமலர் அன்பியம்**
77. ஓஃபிலியா தாமஸ்
78. விஜி சகாயராஜ்
79. செலஸ்டினா
80. எல்சிட்டா ஆனந்தன்
81. ஜோசப் வில்லவராயர்

**சூசையப்பர்**
82. கிறிஸ் ரிஜோ
83. ரூபி கொர்னேலியுஸ்

**திருச்சிலுவை**
84. கில்டன் சரோலின்
85. கைத்தான் ரமணி





## II. இதர பங்குகளிலிருந்து விடை அனுப்பியவர்கள் : 66

### பரிசு பெறுபவர்கள் : 4

1. **விர்ஜின்,** சென்னை
2. **ராணிசேகர்,** அன்னை வேளாங்கன்னி, தூத்துக்குடி
3. **சகோ. அப்போலின்,** மதுரை
4. **பில்கேட்ஸ் சாவியோ,** தங்கச்சிமடம்

### இதர பங்குகளிலிருந்து பாராட்டு பெறுபவர்கள் : 62

**ஆலந்தலை**
86. ஃபொன்சேகா
87. மத்தேயு ஜெகமணி

**ஆறுமுகனேரி**
88. தொம்மை அந்தோனி

**குரும்பூர்**
89. சுபாடெரன்ஸ்

**சென்னை**
90. கமலஜோதி ஜெயசீலன்
91. சகாயராணி இம்மானுவேல்
92. எட்வர்ட்; அமலி
93. உமாகில்பர்ட்

**பாளையங்கோட்டை**
94. பிரேமாகுணசீலன்
95. டெனிசா வி.
96. ஸ்வர்ணா ஃபர்னான்டோ

**கயத்தாறு**
97. அமல்ராஜ் எஸ்.
98. ஜெசிந்தா ராணி

**மதுரை**
99. ஜோசப் இராஜமாணிக்கம்

**பெரியகுளம்**
100. குழந்தை தெரஸ்

**வீரபாண்டியன்பட்டணம்**
101. ஆண்ட்ரின் சில்வேரா

**கோவளம்**
102. சரோஃபின் ஜோசப்

**திண்டுக்கல்**
103. ஜெர்மோன்
104. மரிய மதலேன்
105. ரோசாலி

**திருச்சி**
106. மோனிட்டா கிறிஸ்டி
107. ஸ்டெல்லா
108. ஜான்சி ராணி
109. மாத்யூ விவேக்
110. ஆஞ்சலா

**தங்கச்சிமடம்**
111. பில் கேட்ஸ் சாவியோ

**வடக்குத்து**
112. ஹென்றி தாஸ்

**வீரக்குறிச்சி**
113. ரோஸ்மேரி

**புதியம்புத்தூர்**
114. ஹெலன் அன்னமணி
115. வினோதா அற்புதராஜ்

**தூத்துக்குடி நகர பங்குகள்**

**திரு இதயங்களின் பேராலயம்**
116. பெனிட்டா
117. எல்சி
118. ரிமோல்டா
119. சுசீலன்
120. ஜூலியட் வாஸ்
121. ரமோலா கமிலஸ்

**குருஸ்புரம்**
122. பிளாசி செல்வராஜன்
123. ஜான்சி மெண்டிஸ்
124. தமிழ்ச் செல்வன்
125. சி.டி. ஆசீர்வாதம்

**லயன்ஸ் டவுண் சகாய மாதா**
126. செரினா
127. சுகிர்தா

**யூதா ததேயு கோவில்**
128. ரோஸ் சேவியர்
129. சகாயராஜ் ரோட்ரிக்ஸ்
130. கமிலஸ் மோத்தா

**காந்திந கர்**
131. சாந்தினி
132. ரியாலினோ
133. ஃபின்டன் சோஃபியா
134. விஜிலியா பர்னாந்து
135. ரமேஷ் நர்மதா

**அன்னை வேளாங்கன்னி கோவில்**
136. ஜெசிந்தா ஃபர்னான்டோ
137. வினிஃப்ரட் பிரின்ஸ்டன்

**இஞ்ஞாசியார்புரம்**
138. சூசை நெவின்
139. அற்புத செல்வி

**இரத்னபுரம் சவேரியார்கோவில்**
140. குழந்தை தெரசா எஸ்.

**அந்தோனியார் கோவில்**
141. மென்சிலா லொயோலா
142. சோஃபியா விஜய்

**லூர்தம்மாள்புரம்**
143. ரெனிஸ்டன்ஜெர்லின்

**திரேஸ்புரம்**
144. பிலோசான்ட்ரியாஅகிலன்
145. கோல்வின் சேசுராஜ்

**தூத்துக்குடி இதரபங்குகள்**
146. சகாயிட்டா மச்சாது
147. பேபி வால்டர்



**கடந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 143**

**இந்த மாதம் சரியான விடை எழுதியவர்கள் : 153**

**பனிமய மாதாவின் பிள்ளைகள் அனைவருக்கும்**

**இனிய புத்தாண்டு வாழ்த்துகள்!**





# பனிமய சாட்சியங்கள்

**பனிமய சாட்சியம் : 42**

## திரு. சிமியுஸ், பனிமய அன்னை பேராலயப் பங்கு

தூய பனிமய அன்னைப் பேராலயப் பங்கைச் சேர்ந்த எனக்கு 30 வயது. கொரோனாப் பெருந்தொற்றுக் காலத்தில் எனக்குக் கப்பல் பணிக்கான அழைப்பு வராமல் பெரிதும் கவலையடைந்திருந்தேன். கடந்த 2020ஆம் ஆண்டு நவம்பர் 3ஆம் சனியன்று “வேலைவாய்ப்புக்காகக் காத்திருப்போருக்கான” பரிந்துரை நோன்பு வழிபாட்டில் பீடத் திருமுற்றத்திற்குள் (கிராதிக்குள்) அமர்ந்து நம்பிக்கையோடு கலந்துகொண்டேன். அருள்தந்தையின் அறிவிப்பைத் தொடர்ந்து ஒப்புரவு அருள்சாதனத்திலும் கலந்துகொண்டேன். வழிபாடு நடைபெற்ற ஒரு வாரத்திற்குள் எனக்குக் கப்பலிலிருந்து அழைப்பு வந்துவிட்டது. என்னால் நம்பவே முடியவில்லை. உடனே புறப்பட்டு டிசம்பர் மாதம் 9ஆம் நாள் கப்பலில் பணியில் சேர்ந்துவிட்டேன். கப்பலில் பணியாற்றிய 11 மாதங்களும் பனிமய அன்னையிடம் தவறாது செபித்தேன். தாய் என்னை உயர்த்தி, அதிகாரிகளிடம் நற்பெயர் பெற்றுத் தந்தார். மரியே வாழ்க! பனிமய அன்னையே வாழ்க!

**பனிமய சாட்சியம் : 43**

## மேரி, தூத்துக்குடி

என் பெயர் மேரி. பனிமய மாதா பேராலயப் பங்கைச் சார்ந்தவள். (அன்னை தெரசா அன்பியம்). என் மகளுக்கு கல்லீரலில் சிறுசிறு பருக்கள் இருப்பதாக மருத்துவர் கூறினார். அதனால் கல்லீரல் சதையை எடுத்து பரிசோதனை செய்ய வேண்டும் என்று கூறினார். நான் பனிமய தாயிடம் மன்றாடினேன். எனது மகளுக்கு சோதனையில் எல்லாம் நன்றாக உள்ளது என்று கூறினார்கள்.

இயேசுவுக்கே புகழ், மரியே வாழ்க!

**பனிமய சாட்சியம் : 44**

## பெனடிக்ட், தூத்துக்குடி

என் பெயர் பெனடிக்ட். என் மனைவி பெயர் சகாயம்மாள். எங்கள் அருமை மகள் ப்லசிலா இருதயராஜ் திருமணமாகி 8 ஆண்டுகள் குழந்தைச் செல்வமின்றி இருந்தார். குழந்தைச் செல்வத்துக்காக நாங்கள் நம்பிக்கையுடன் செபித்து வந்தோம். கடந்த 2020 டிசம்பர் மாதம் பனிமய அன்னை பேராலயத்தில் நடைபெற்ற “குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்கான” மூன்றாம் சனி நோன்பு வழிபாட்டில் நம்பிக்கையுடன் கலந்துகொண்டு மன்றாடினோம். பனிமயத் தாய் எங்கள் மன்றாட்டைக் கேட்டு மகளை ஆசீர்வதித்தார். எங்கள் மகள் கருவுற்று, கடந்த 10.11.2021 அன்று அழகிய பெண் குழந்தையைப் பெற்றெடுத்தார். பனிமய அன்னையே வாழ்க, தஸ்நேவிஸ் மாமரியே வாழ்க! (அலைபேசி: 80565 13254).

# பனிமயப் பகிர்வு

(பேராலயப் பங்கு மக்களுக்கான மடல் - 30)

## சனவரி - 2022

| | | | |
|---|---|---|---|
| அதிபர் & பங்குத் தந்தை | : | அருள்முனைவர் குமார்ராஜா | 94431 47823 |
| உதவிப் பங்குத் தந்தை | : | அருள்பணி விமல்ஜேன் | 9791529877 |
| களப் பணியாளர் | : | சகோதரர் அசாத் | 88709 26751 |
| பங்கு அலுவலகம் | : | | 2320854 |
| பங்கு அலுவலக வாட்ஸ் அப் | : | | 82209 47823 |

## திருவழிபாட்டு நேரங்கள்

| தினசரி திருப்பலிகள் | சனிக் கிழமைகளில் | | ஞாயிற்றுக் கிழமைகளில் | |
|---|---|---|---|---|
| காலை 5.30, 6.30 | காலை 5.30, 6.30 | திருப்பலி | காலை 5.00, 6.30, 8.00 | திருப்பலி |
| மாலை 5.30 | காலை 11.00 | செபமாலை, **நவநாள் திருப்பலி** | காலை 9.30 | ஆங்கிலத் திருப்பலி |
| | மாலை 5.30 | திருப்பலி | மாலை 5.30 | திருப்பலி |
| | மாலை 6.30 | நவநாள், நற்கருணை ஆசீர் | மாலை 6.30 | நற்கருணை ஆசீர் |

**ஒப்புரவு அருள்சாதனம்** தினமும் காலை 06.00 - 06.30
சனிக்கிழமைகளில் மாலை 04.30 - 07.00

- ✓ திருமுழுக்கு - ஞாயிற்றுக்கிழமைகளில் காலை 10.30 (தவக்காலத்தில் திருமுழுக்கு வழங்கப்பட மாட்டாது)
- ✓ புதுநன்மை - புதன், சனி, ஞாயிறுகளில் (தவக்காலம், ஆகஸ்ட் மாதம் முழுவதும் மற்றும் மாதத்தின் முதல் சனி மாலை தவிர).
- ✓ திருமணம் - பேராலய மரபுப்படி, சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் திருமணம் நடைபெறுவதில்லை. பேராலயப் பங்கினருக்கு மட்டும் ஞாயிறு காலை 11.00. திருவருகைக் காலத்திலும், தவக்காலத்திலும் திருமணம் நடைபெறாது.
- ✓ ஞாயிறு மறைக்கல்வி : ஞாயிறு காலை 10.30 - 11.30
- ✓ திறன் பயிற்சி வகுப்புகள் : ஞாயிறு மாலை 04.30 - 06.00
- ✓ விவிலியப் பாசறை : செவ்வாய் மாலை 06.15 - 08.00
- ✓ அன்பியக் கூட்டங்கள் : புதன், வியாழக்கிழமைகளில்
- ✓ கூட்டுத் திருமணம் : 08.05.2022
- ✓ உறுதிப்பூசுதல் அருள்சாதனம் : 29.05.2022
- ✓ புதுநன்மை அருள்சாதனம் : 31.07.2022

பெறவிரும்புவோர் குடும்ப அட்டையுடன் பங்கு அலுவலகத்தில் பதிவு செய்யவும். அதற்கான ஞாயிறு மறைக்கல்வியில் தவறாது கலந்துகொள்ளவும்.

- ✓ **பங்குத்தந்தையரைச் சந்திக்கும் நேரம்** : காலை 10.00 மணி - 01.00 மணி
  மாலை 04.30 மணி - 05.30 மணி
- ✓ இல்லம் மந்திரித்தல், வாகன மந்திரிப்பு போன்றவற்றுக்கு முன்கூட்டியே அலைபேசியில் தகவல் தந்தபின் வந்தால் காத்திருத்தலை, தாமதத்தைத் தவிர்க்கலாம்.
- ✓ நோயில்பூசுதல் மற்றும் தவிர்க்க இயலாத அவசரப் பணிகளுக்கு எந்த நேரமும் தொடர்பு கொள்ளலாம். அலைபேசியில் பேசாமல், நேரிலே வந்துவிடுங்கள்.



## பனிமயச் சுவடுகள்

**(பங்கின் முக்கிய நிகழ்வுகளின் தொகுப்பு)**

301. டிசம்பர் மாத **முதற் சனி**யாகிய **04.12.2021** அன்று மாலையில் பேராலயத்தைச் சுற்றி சப்பரப் பவனி நடைபெற்றது. பவனி, தொடர்ந்து நடைபெற்ற நவநாள் மற்றும் நற்கருணை ஆசீர் மூன்றும் நேரலையாக சூர்யா தொலைக்காட்சியிலும், நமது ஸ்நோஸ் பசிலிக்கா இணையதள யூட்யூப் அலைவரிசையிலும் ஒளிபரப்பப்பட்டன.

302. **சூசையப்பர் ஆண்டின் மறைமாவட்ட அளவிலான நிறைவு விழா** நமது பேராலயத்தில் 05.12.2021 ஞாயிறு மாலை 04.30 மணிக்கு சூசையப்பர் புகழ்ப் பாடல்களுடன் தொடங்கியது. மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்களின் தலைமையில் நிறைவுவிழாத் திருப்பலி 05.00 மணிக்குத் தொடங்கி, 06.45 மணிக்கு நிறைவுபெற்றது. வந்திருந்த திருப்பயணிகளுக்கு 2000 சூசையப்பர் ரொட்டிகள் பேராலயத்தின் சார்பில் வழங்கப்பட்டன.

303. பேராலயப் பங்கு மேய்ப்புப் பணிக்குழுவின் **5ஆம் பொதுக்குழுக் கூட்டம்** 10.12.2021 வெள்ளி மாலை 07.15 மணிக்கு அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது. தஸ்நேவிஸ் மாதா உயர் பணிப் பயிற்சியகம், பேராலயத்தில் பழுது பணிகள், பேராலயப் பங்கைப் பூர்வீகமாகக் கொண்டவர்களுக்கு அடக்கம் எடுப்பதற்கான நிபந்தனைகள் உட்பட பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

304. **புனித வின்செண்ட் தே பவுல்** சபையினரின் மறைமாவட்ட அளவிலான கிறிஸ்துமஸ் விழா மேதகு ஆயர் ஸ்டீபன் அவர்களின் தலைமையில் 12.12.2021 ஞாயிறு காலை 10.00 முதல் பிற்பகல் 01.30 வரை நமது அந்தோனியார் அரங்கத்தில் நடைபெற்றது. 150க்கும் மேற்பட்ட வின்செந்தியர்கள் கலந்துகொண்டனர்.

305. **நற்கருணை வீரர் சபையின் மாநாடு** நமது அந்தோனியார் அரங்கத்தில் 14.12.2021 செவ்வாய் காலை 10.00 முதல் மாலை 03.30 வரை நடைபெற்றது. நற்செய்தி நடுவ இயக்குநர் அருள்பணி. ஸ்டார்வின் தலைமையில் நடைபெற்ற இம்மாநாட்டில் ஏறக்குறைய 70 நற்கருணை வீரர்கள் கலந்துகொண்டனர்.

306. டிசம்பர் மாதத்திற்கான விவிலியப் பாசறை **"மண வாழ்வின் தடைகளும், விடைகளும்"** என்னும் தலைப்பில் அந்தோனியார் அரங்கில் 14.12.2021 மாலை 06.15 மணிக்கு நடைபெற்றது. 34 பேர் கலந்துகொண்டனர்.

307. **இறையடியார் அந்தோனி சூசைநாதரின்** 130ஆம் பிறந்தநாளை முன்னிட்டு 18.12.2021 சனி காலை 06.30 மணிக்குப் பங்குத் தந்தை குமார்ராஜாவின் தலைமையில் பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினர் **அலங்காரத்தட்டு** பங்கு ஆலயத்தில் திருப்பலி நிறைவேற்றி, இறையடியாரின் திருவுருவம் முன்பு செபித்து, கேக் வெட்டி பங்கு மக்களுக்கு வழங்கினர். அன்று மாலை பேராலய வளாகத்தில் கொடியேற்றி, கேக் வெட்டி, ஏழைகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

308. டிசம்பர் மாத **மூன்றாம் சனி சிறப்பு வழிபாடு (14)** 18.12.2021 சனி அன்று நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை நடைபெற்றது. "குழந்தைச் செல்வத்துக்காகக் காத்திருப்போருக்காக" என்னும் கருத்துக்காக நடைபெற்ற இவ்வழிபாட்டில் 168 தம்பதியரின் வேண்டுதலுக்காகப் பரிந்துரைத்து மன்றாடப்பட்டது.

309. பேராலயப் பங்கின் பரிசுத்த அமலோற்பவ மாதா வாலிபர் சபையினரின் முன்னெடுப்பில் கடந்த 18.12.2021 சனி இரவு 10.00 மணிக்குத் தொடங்கிய **முழு இரவு தொடர் செபமாலை** அதிகாலை 05.00 மணித் திருப்பலியுடன் நிறைவுபெற்றது. மாநகரின் 9 பங்குகளிலிருந்து பகராளிகள் கலந்துகொண்டனர். அருள்முனைவர் ஜான் செல்வம் மறையுரையாற்றினார்கள்.

நள்ளிரவில் எரியும் திரிகளோடு பேராலயத்தைச் சுற்றி செபமாலைப் பவனி நடைபெற்றது. மாநகர் முழுவதிலுமிருந்து திரளான மக்கள் கலந்துகொண்டனர்.

310. பேராலய **லூர்துமாதா இளம்பெண்கள்** சபையின் 2ஆம் ஆண்டுவிழா 19.12.2021 ஞாயிறு காலை 06.30 திருப்பலியில் கொண்டாடப்பட்டது, புதிய பொறுப்பாளர்கள் பொறுப்பேற்றுக் கொண்டனர். புதிய உறுப்பினர்கள் சபையில் சேர்க்கப்பட்டனர். கடந்த ஆண்டு அதிக நாள்கள் சபைக் கூட்டத்திற்கு வந்த 6 உறுப்பினர்களுக்கு ஊக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன.

311. கடந்த 19.12.2021 ஞாயிறு காலை **ஞாயிறு மறைக்கல்வி** மாணவர்களின் கிறிஸ்துமஸ் விழா கொண்டாடப்பட்டது. முந்தின ஞாயிறு நடைபெற்ற அடிப்படை செபங்கள் மனப்பாடத் தேர்வில் முழு மதிப்பெண் பெற்ற அனைவருக்கும் பேனா பரிசாக வழங்கப்பட்டது, ஆசிரியர்களுக்கு விவிலிய நாள் குறிப்பேடு வழங்கப்பட்டது. தொடர்ந்து இரு ஞாயிற்றுக்கிழமைகள் விடுமுறை என அறிவிக்கப்பட்டது. தொடங்கப்பட்டன. நான்கு முதல் 12ஆம் வகுப்பு வரை படிக்கின்ற அனைத்து மாணவ, மாணவியரும் ஞாயிறு மறைக்கல்வி பெறவேண்டும் என்று பெற்றோருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

## பங்கில் நிகழ்ந்தவை



### *வரவேற்கிறோம்*

### 1. திருமுழுக்கு பெற்றவர்கள்

| எண் | குழந்தை | பெற்றோர் | திருமுழுக்கு நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 83. | ஸனிகா | அபினாஷ்-எல்சி | 12-12-2021 | குழந்தை இயேசு |
| 84. | ஆவ்லின் மிஸ்டிகா | திவாகர்-மாலினி | 26-12-2021 | பவுலடியார் |
| 85. | தெய்வீகன் | சரவணன் | 26-12-2021 | பரிபூரணமாதா |



### *வாழ்த்துகின்றோம்*

### 2. புதுநன்மை பெற்றவர்கள்

| எண் | பெயர் | பெற்றோர் | புதுநன்மை நாள் |
|---|---|---|---|
| 85. | ஜோனஸ் | பிராங்கோ - ஸ்வீன்சி | 04-12-2021 |
| 86. | மரிய பேபியானா | பிராங்கோ - ஸ்வீன்சி | 04-12-2021 |
| 87. | ரிஜோன்சியா | ஆக்னல் - ஜோதி | 11-12-2021 |
| 88. | சாம்சியோ | குமார் - அகஸ்டா | 25-12-2021 |
| 89. | கிராஸ்வின் டேரியோ | குமார் - அகஸ்டா | 25-12-2021 |
| 90. | கேத்ரின் அல்சினா | அல்டோபாய் - ஹென்சி | 26-12-2021 |
| 91. | ஜோஸப்பின் வில்மா | பொம்பெய் குரூஸ்ராஜ் - வனிதா | 29-12-2021 |
| 92. | ஜோவிஸ் | மெலிட்டோ - டயானா | 29-12-2021 |



### *ஆசி கூறுகின்றோம்*

### 3. திருமணத்தில் இணைந்தவர்கள்

| எண் | மணமக்கள் | திருமணநாள் |
|---|---|---|
| 76. | தெய்வீகன் - மோனிஷா | 26-12-2021 |





### இறைவனைப் போற்றுகிறோம்

## 4. நோயில்பூசுதல் பெற்றவர்கள்

| எண் | பெயர் | கணவர் / மனைவி | நாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 16. | புஷ்பம் | ......... | 26-12-2021 | மிக்கேல் அதிதூதர் |



### செபிக்கின்றோம்

## 5. இறைவனில் இளைப்பாறியவர்கள்

| எண் | பெயர் | கணவர் / மனைவி | இறந்தநாள் | அன்பியம் |
|---|---|---|---|---|
| 105. | அலாய்சியஸ் | பெல்சி | 23-11-2021 | சவேரியார் |
| 106. | ராஜம்மாள் | ஜேக்ஸ் | 24-11-2021 | இரக்கத்தின் மாதா |
| 107. | கிளமென்ஸ் | மேரியம்மாள் | 30-11-2021 | கிறிஸ்து அரசர் |
| 108. | சரோஜினி | முடியப்பன் பாபு | 13-12-2021 | திருச்சிலுவை |
| 109. | தியோடர் | ஜெனட் | 15-12-2021 | கிறிஸ்து அரசர் |

## நடைபெற இருப்பவை


- இந்த ஆண்டின் முதல் நாளே (01.01.2022) சனிக்கிழமையாக இருப்பதால், அன்று காலை 11.30 மணிக்கு சிறப்புத் திருப்பலி நிறைவேற்றப்படும். **முதற் சனி சப்பரப் பவனி**யும், நற்கருணை ஆசீர், பாலன் ஆசிர் ஆகியன அன்று மாலை 05.30க்கு நடைபெறும்.
- ஜனவரி மாதத்திற்கான விவிலியப் பாசறை **“ஆசீர்வாதத் தடைகளும், விடைகளும்”** என்னும் தலைப்பில் அந்தோனியார் அரங்கில் 04.01.2022 மாலை 06.15 மணிக்கு நடைபெறும். இதில் ஆசிரியர் பணிக்காக மறைமாவட்டத்தில் பதிவு செய்திருப்போர் கலந்துகொண்டு, தங்கள் பதிவு அட்டைகளைப் புதுப்பித்தலுக்காகப் பங்குத் தந்தையிடம் வழங்கவேண்டும்.
- 07.01.2022 தலைவெள்ளி அன்று நோயாளர்கள், முதியோருக்கு **இல்லங்களில் நற்கருணை** வழங்கப்படும்.
- 15.01.2022 அன்று **மூன்றாம் சனி நோன்பு வழிபாடு (15)** நண்பகல் 11.30 முதல் பிற்பகல் 03.00 வரை “திருமண வரனுக்காகக் காத்திருப்போருக்காக” நடைபெறும்.

### திருச்சிலுவைச் சிற்றாலயத்தில்...

- ஒவ்வொரு வெள்ளியும் - நண்பகல் 12.00 மணிக்கு இறைவேண்டலும், தொடர்ந்து திருச்சிலுவை அன்பு உணவும்.
- ஒவ்வொரு செவ்வாயும் - பகல் 12.30 முதல் 04.00 மணி வரை நற்செய்தி அறிவிப்பு, குணமளிக்கும் நற்கருணை ஆசிர், திருப்பலி.

| எண். | நாள் | கிழமை | செய்தியாளர் | செய்தித் தலைப்பு |
|---|---|---|---|---|
| 63. | 04.01.2022 | செவ்வாய் | அருள்பணி. ஜெரோசின் | புத்தாண்டு ஆசிகள்! |
| 64. | 11.01.2022 | செவ்வாய் | அருள்பணி. ரெயோசில் பெப்பி | ஆசிகள் பொங்கட்டும்! |
| 65. | 18.01.2022 | செவ்வாய் | அருள்பணி. ஜெரால்ட் ரவி | உடல் நலம் பெறுக! |
| 66. | 25.01.2022 | செவ்வாய் | அருள்பணி. மார்டின் குமார் | உள்ள நலம் பெறுக! |

| 10ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி | முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி |
| --- | --- |



# T. மோகன் வில்லவராயர்
# D. விஜயகுமாரி

(W/o. Late T. மோகன் வில்லவராயர்)
ஓய்வு ஆசிரியை (சகாயமாதா தொடக்கப்பள்ளி)

| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 10.08.1948 | 06.07.2012 |

| மண்ணில் | விண்ணில் |
| --- | --- |
| 20.08.1950 | 29.01.2021 |

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"இயேசு அவரிடம், உயிர்த்தெழுதலும் வாழ்வும் நானே.
என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்"
(யோவான் 11:25)



மண்ணில்
03.10.1970

விண்ணில்
13.01.2021

# மரியதாஸ் பர்னாண்டோ

என் பிரியமே! எமைப் பிரிந்தாயே!
பாசம் உலாவிய உன் கண்களும் எங்கே?
பாய்ந்து துலாவிய உன் கைகளும் எங்கே?
நேசம் அளாவிய உன் விரல்களும் எங்கே?
தேன்சிந்தும் உன் பாடல்களும் எங்கே?
உதிரத்துடன் கலந்து உவப்புடன் பணி செய்தவனே!
உன் சங்கம் புன்னகையை மரணம் தழுவிய மாயம் என்னவோ?
ஈர மனத்தவனே! ஈகை குணத்தவனே!
உற்றார் உறவில் உயர்வாக கலந்தவனே!
சுற்றத்தார் உயர்வில் உணர்வாக கலந்தவனே!
உறங்க விடாமல் தடுக்கிறது உன் நினைவு
அதனால் உறங்காமல் விடிந்து விடுகிறது எம் இரவு!
கருவிழியும்... கண்ணீருமாய்...
காலத்தின் கடைசிவரை காத்திருப்போம் உன் நினைவில்

**பிரிவால் துயருறும்**

மனைவி : **டார்வினா**
மகள் : **மேக்டலீனா**

**திருப்பலி : 13.01.2022, காலை 11.00 மணி**
**இடம் : திருச்சிலுவை சிற்றாலயம், தூத்துக்குடி**

## விண்ணக வாழ்வின்

# மூன்றாம் ஆண்டு நினைவு அஞ்சலி

"நான் படுத்துறங்கி விழித்தெழுவேன்.
ஏனெனில் ஆண்டவரே எனக்கு ஆதரவு"

(திபா 35)



மண்ணில்
**20.01.1953**

விண்ணில்
**22.10.2018**

# T. பென்சன் பூபாலராயர்

**வயது : 65**

எங்களது குடும்பத்தின் ஒளிவிளக்காய்
பாசத்தின் பிறப்பிடமாய் உறவின் வேராய் இருந்த நீங்கள்
நினையாத நேரத்தில் அணைந்து இறைவனிடத்தில் சேர்ந்தீரே!
உம் ஆன்மா இறைவனில் அமைதிபெற எந்நாளும்
உங்களை எங்கள் செபத்தில் நினைத்து வாழ்கின்றேன்.

என்றும் உங்கள் நினைவில்

**மனைவி : B. அமுதா பென்சன்**
**குடும்பத்தினர்**

*எண் 34, கிரகோப் தெரு,*
*தூத்துக்குடி - 628 001.*

SHINY Ph : 98421 31493